# DEPOSITION OF WITNESS

## **In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

## **Sessions Case No. 19 / 2025**

Prosecution Witness No. PW. 1

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | நாகராஜ் | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம்ணு | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 12.08.2025.

(A1 - A5 Produced)

**முதல் விசாரணை** :

நான் ஸ்ரீரங்கம், அம்பேத்கார் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மாநகராட்சியில் குப்பை அள்ளும் வேலை செய்கிறேன். இறந்துபோன சுரேஷை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் சுரேஷ் கொலை வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள், நான் தெரியாது என்று சொன்னேன்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக தீர்மானித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை :–</u>

போலீஸ் விசாரணையில் நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 22.9.2024 அன்று இரவு 7.20 மணியளவில் நான் அம்பேத்கார் நகர், கோபி தேங்காய் குடோன் முன்பாக நின்று கொண்டிருந்தபோது, இவ்வழக்கில் இறந்தபோன சுரேஷ் அவரது மனைவி ராகினியும் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களுக்கு எதிரே எதிரி நந்தகுமார், ஜெம்புகேஸ்வரர் ஆகியோர் ஒரு வாகனத்தில் சுரேஷின் பின்பக்கமாக பாலகிருஷ்ணனும், விமல் ராஜும் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், சுரேஷ் பிரகாஷ் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், அவர்கள் அனைவரும் சுரேஷ், ராகினி வந்த இருசக்கர வாகனத்தை சூழ்ந்து கொண்டு, நந்தகுமாரும், ஜெம்புகேஸ்வரரும் சுரேஷை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எங்களை எதிர்த்து பூ மார்க்கெட்டில் நீ இருந்துருவீயா, இப்போ உயிருடன் விட்டாதானே எங்களை எதிர்த்து நிப்ப என்று சொல்லிக் கொண்டு கையில் வைத்திருந்த அருவாளால் சுரேஷின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும், அதை பார்த்த ராகினி அலறிக் கொண்டு வெட்டாதீங்க என்று சொல்லிக் கொண்டு, தடுத்தபோது பாலகிருஷ்ணன் கையில் வைத்திருந்த அருவாளால் சுரேஷின் வலது காதில் மாறி மாறி வெட்டினார் என்றும், அப்போது விமல்ராஜ், ராகினியை பார்த்து இதோடு ஒழிந்து போடி என்று சொல்லி அவரது இடது கால் தொடையிலும், இடது கால் கட்டை விரலிலும் வெட்டினார் என்றும், விமல்ராஜ், சுரேஷின் தோள்பட்டை வலது முட்டியிலும் மாறி மாறி வெட்டினார் என்றும், சூர்யா பிரகாஷ் அருவாளால் சுரேஷின் வலது பக்க கழுத்தில் மாறி மாறி வெட்டினார் என்றும், அதை பார்த்து அங்கிருந்தவர்கள் பயந்து ஓடினார்கள் என்றும், சுரேஷ் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும், எதிரிகள் அனைவரும் அங்கிருந்து தப்பித்து

**சென்றுவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

**இல்லை.**

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.